aanmeegamalar.com
e-magazine
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மெயில் புக்



# 2026

## திருஉத்தரகோசமங்கை ஆருத்ரா தரிசன சிறப்பிதழ்

மக்களின் நன்மதிப்பை பெற்ற

திருஉத்தரகோசமங்கை ஆருத்ரா தரிசனம் காண வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

செல்: 9025161717

ராம் சாய் ஹோட்டல்

(சைவம்)









எங்களிடம் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில் சைவ உணவுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

G.H. ரோடு மற்றும் கேணிக்கரை, இராமநாதபுரம்.

aanmeegamalar.com

## ஒருமுறை சென்றாலும் சொர்க்க வாசத்தை தரும்

# திருஉத்ரகோசமங்கை திருக்கோவில்





சிவனின் சொந்த ஊர், உலகிலயே முதல் நடராஜர் தோன் றிய ஊர், உலகின் உள்ள அனைத்து ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் வந்து வழிபாடு செய்த கோவில்.

நவகிரகங்கள் தோன்றுவதற்கு முன்னரே உருவான கோயில். நான்கு யுகங்கள் தோன்றுவதற்கு முன்னரே உரு வான ஆலயம். ஆயிரம் சிவ அடியார்கள் ஒரே சமயத்தில் மோட்சம் பெற்று சகஸ்கர லிங்கம் உருவாக்கிய ஆலயம்.

3000 ஆண்டுகளாய் பூத்து குலுங்கும் இலந்தை மரம் உள்ள ஆலயம்.

தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற வாக்கியம் உருவான இடம்.

மரகத நடராஜர் சிலை உள்ள ஆலயம். இப்படி பல அதிசயங் களையும், ஆச்சயர்களையும் தன்னகத்தே கொண்டு சாந்தமாய் இருக்கும் ஆலயம் அதுதான் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள திருஉத்ரகோசமங்கை மங்கள நாதார் மங்களநாயகி திருக்கோவில்.

தவறாமல் இத்திருக்கோவிக்கு ஒருமுறையாவது சென்று வாருங்கள்.

### உத்தரகோச மங்கை புனித தல சிறப்பு தகவல்கள்

* உத்தரகோச மங்கையில் உள்ள மூலவர் சுயம்பு லிங்கம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக கணிக் கப்பட்டுள்ளது.
* உத்தரகோச மங்கையே சிவபெருமானின் சொந்த ஊர் என்று அழைக்கப்படுகிறது.
* இத்தலத்துக்கு உமா மகேசுவரர் சன்னதி முன்பு நின்று வழிபாடுகள் செய்தால் தம்பதியர் ஒற்றுமை பலப்படும்.
* திருவிளையாடல் புராணத்தில் வரும் 'வலை வீசி மீன் பிடித்த படலம்' இத்தலத்தில்தான் நடந்தது.
* இத்தலத்தில் வழிபாடுகள் செய்பவர்களுக்கு இம்மையில் அனைத்து நன்மைகளும் கிடைக்கும். மறுமை யில் முக்தி கிடைக்கும்.
* மங்கள நாதர் தலத்தில் திரு மணம் செய்தால் நிறைய மங்களம் உண் டாகும் என்பது ஐதீகம். எனவே முகூர்த்த நாட்களில் நிறைய திருமணங்கள் இத்தலத்தில் நடைபெறுகின்றன.
* மூலவருக்கு மங்களநாதர் என்ற பெயர் தவிர மங்களேசுவரர், காட்சி கொடுத்த நாயகர், பிரளயாகேசுவரர் என்ற பெயர் களும் உண்டு.
* இறைவிக்கு மங்களேசுவரி, மங்களாம்பிகை, சுந்தரநாயகி ஆகிய பெயர்கள் உள்ளன.
* இறைவி மங்களேசுவரி பெயரில் வ.த. சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். 1901ம் ஆண்டு வெளியான அந்த நூல் 1956ம் ஆண்டு மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டது.
* இத்தலத்தில் உள்ள கல்வெட்டுக்களில் ராவணனின் மனைவி மண்டோதரி பெயர் இடம் பெற்றுள்ளது. எனவே இத்தலம் ராமாயண காலத்துக்கும் முன்பே தோன்றியதற்கான ஆதாரமாக இந்த கல்வெட்டு கருதப்படுகிறது.
* இத்தலத்து பஞ்சலோக நடராஜர் மிகவும் வித்தியாசமானவர். இவர் வலது புறம் ஆண்கள் ஆடும் தாண்டவமும், இடதுபுறம் பெண்கள் ஆடும் நளினமான கலைப் படைப்பாக உள்ளார்.
* இத்தலத்து முருகனுக்கு வாகனமாக யானை உள்ளது. முருகப்பெருமானுக்கு இந்திரன் தனது ஐராவதத்தை இத்தலத்தில் அளித்தான் என்று, இத்தலமான்மியமான 'ஆதி சிதம்பர மகாத்மியம்' கூறுகிறது.
* சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் "இலவந் திகைப் பள்ளி" என்பது உத்தரகோச மங்கையைக் குறிக்கும் என்கிறார்கள். மேற்குறித்த கல்வெட்டில் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் பெயரும் செதுக்கப்பட்டுள்ளது.
* மாணிக்கவாசகருக்கு உருவக் காட்சிதந்த சிறப்புடைய தலம். இத்தலத்தில் சுவாமியை அம்பாள் பூசிப்பதாக ஐதீகம்.
* சொக்கலிங்கப் பெருமான் பரதவர் மகளாகச் சபித்துப் பின் சாபவிமோசனம் செய்து அம்பாளை மணந்துகொண்டு இத்தலத்திலேயே அம்பாளுக்கு வேதப்பொருளை உபதேசம் செய்து, பின்னர் அம்பிகையுடன் மதுரை சேர்ந்ததாக மதுரைப்புராணத்தில் சொல்லப் பட்டுள்ளது.
* இத்தலத்து கோவில் குளத்தில் வாழும் மீன்கள் நல்ல நீரில் வாழும் மீன்கள் இல்லை. கடல்நீரில் வாழும் மீன்களாகும்.
* பிரதோஷத்தன்று இங்கு தாழம்பூ வைத்து வழிபடுகின்றனர். இந்த கோவிலில் சிவனுக்கு அம்பாளுக்கு தாழம்பூ மாலை கட்டிப்போட்டால் அனைத்து தோஷங்களும் நீங்குவதாக ஐதீகம். இதனால் திருமணம் உடனே கைகூடும்.
* இங்கு ஆதிகாலத்து வராகி கோவில் உள்ளது இங்கு ஒவ்வொரு வெள்ளி,செவ்வாய். ஞாயிறு தினங்களில் ராகுகாலத்தில் பூஜை தொடர்ந்து செய்தால் தீராத பிரச்னைகள், திருமணத்தடை போன்றவை விலகுகின்றன.
* டெல்லியை தலைநகராகக் கொண்டு 1300ம் ஆண்டு ஆட்சி செய்து வந்த அலாவுதீன் கில்ஜி, உத்தரகோச மங்கையில் மரகதகல் நடராஜர் சிலை இருப்பதைஅறிந்துஅதை கொள்ளையடிக்க முயன்றான். மங்கள நாதர் அருளால் அவன் முயற்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை.
* காகபுஜண்ட முனிவருக்கு கவுதம முனிவரால் ஏற்பட்ட சாபம் இத்தலத்தில்தான் நீங்கியது.
* சிவனடியார்கள் 60 ஆயிரம் பேர் இத்தலத்தில் தான் ஞான உபதேசம் பெற்றனர்.
* இத்தலத்தில் உள்ள மங்களநாதர் சன்னதி, மங்களேசுவரி சன்னதி, மரகதகல் நடராஜர் சன்னதி சகஸ்ரலிங்க சன்னதி நான்கும் தனிதனி கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கொடி மரத்துடன் தனித்து இருப்பது குறிப் பிடத்தக்கது.
* நடராஜர் மரகத கல்லில் இருப்பதால் இத்தலத்தை சிலர் ரத்தின சபை என்கிறார்கள். பஞ்ச சபை திருத்தலங்கள் தோன்றுவதற்கு முன்பே இத்தலம் தோன்றியதால் இத்திருத்தலம் எந்த சபைக்கும் உட்படாதது என்றும், அதே நேரம் மற்ற சபைத் தலங்களைக் காட்டிலும் இத்தலம் ரத்தின சபை என்று உயரிய ஸ்தானத்தில் போற்றப்படுகிறது.
* காரைக்கால் அம்மையாரும் இத்தலத்துக்கு வந்து ஈசனை வழிபட்டு சென்றுள்ளார்.
* ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பவுர்ணமி, பிரதோஷம், கிருத்திகை, சதுர்த்தி நாட்களில் இத்தலத்தில் சிறப்பு பூஜைகள் நடத்தப் படுகின்றன.
* சித்திரை மாதம் திருக்கல்யாண வைபவம் வைகாசி மாதம் வசந்த உற்சவம், ஆனி மாதம் பதுநாள் சிவ உற்சவம், ஐப்பதி மாதம் அன்னாபிஷேகம், மார்கழி மாதம் திருவாதிரை விழா மாசி மாதம் சிவராத்திரி ஆகியவை இத்தலத்தில் நடைபெறும் முக்கிய விழாக்கள்ஆகும்.
* தினமும் இத்தலத்தில் காலை 5.30 மணிக்கு உஷத் காலம், 8 மணிக்கு கால சாந்தி, 10 மணிக்கு உச்சிக் காலம், மாலை 5 மணிக்கு சாயரட்சை, இரவு 7 மணிக்கு இரண் டாம் காலம், இரவு 8 மணிக்கு அர்த்தஜாம பூஜைகள் நடத்தப்படுகிறது.
* மங்களநாதருக்கு தினமும் காலை 6 மணிக்கு, மதியம் 12.30 மணிக்கு, மாலை 5.30 மணிக்கு அபிஷேகம் நடத்தப்படுகிறது.
* இத்தலத்தில் அதிகாலை 5 மணி முதல் மதியம் 1 மணி வரையும் பிற்பகல் 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் சாமி தரிசனம் செய்யலாம்.
* மரகத கல் நடராஜர் மீது சாத்தப்பட்டு எடுத்துத் தரப்படும் சந்தனத்தை வெந்நீரில் கரைத்து குடித்தால் தீராத நோய்கள் கூட தீர்ந்துவிடும் என்பது நம்பிக்கை.
* இத்தலத்தில் மொத்தம் 11 விநாயகர்கள் உள்ளனர். இத்தலத்தில் உள்ள ராஜகோபுரத்தில் சர்பேஸ்வரர் சிலை உள்ளது.
* நடராஜர் இங்கு அறையில் ஆடிய பின்னர்தான் சிதம்பரத்தில் அம்பலத்தில் ஆடினார்.
* இது அம்பிகைக்கு பிரணவப்பொருள் உபதேசித்த இடம்.
* தலவிருட்சமான இலந்தமரம் மிகமிகத் தொன்மையானதும் இன்று வரை உயிருடன் உள்ளதும் பல அருள் தலைமுறை களையும் முனிவர்கள் தரிசித்த தல விருட்சம் ஆகும். இந்த இலந்த மரம் 5000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளது.
* வேதவியாசரும், பாராசரும் காகபுஜண்டரிஜி மிருகண்டு முனிவர்கள் பூஜித்த தலம்.
* உலகில் உள்ள 1087 சிவாலயங்களிலும்இருக்கும் அருட் சக்திகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் சகஸ்ரலிங்கம் இங்குள்ளது.
* ஆண்டுக்கு இரண்டு திருவிழா இங்கு நடத்தப்படுகிறது. ஒன்று சித்திரைத் திருவிழா, இன்னொன்று மார்கழித் திருவாதிரைத் திருவிழா இத்திருத்தலத்தில் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளது.
* சிவபெருமானால் பரத நாட்டிய கலையை உலக மக்களுக்கு முதல் முதலில் அறிமுகம் செய்யப்பட்ட திருத்தல மாகும்.
* ஈசன் ஈஸ்வரி பிறந்த ஊரான உத்திரகோச மங்கையில் ஒரு முறை பக்தர்கள் வந்து மிதித்தால் சொர்க்கம் செல்லுவது நிச்சயாமாகும்.
* உத்தர கோசமங்கை ஸ்ரீராமருக்கு ஈசன் சிவலிங்கம் வழங்கி சேது சமுத்திரத்தில் பாலம் போட உத்தரவு வழங்கிய இடமாகும்.
* இத்தலத்தில் மாணிக்கவாசகர் பாடிய பொன்னூஞ்சல் பாடலை குழந்தைகளைதாலாட் டும் போது பாடினால், குழந்தைகள் உயரமாகவும், உன்னத மாகவும் வாழ்வார்கள் என்பது பக்தர்கள் நம்பிக்கையாகும்.






திருஉத்தரகோசமங்கை ஆருத்ரா தரிசனம் காண
வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

நம்ம ஊரு ! நம்ம ஆர்ச் ! நம்ம ஆரஞ்ச் !

ஆரஞ்ச் சூப்பர் மார்ட் A/C

H/O: 7/331, நேதாஜி ரோடு, காந்தி சிலை ஆர்ச் அருகில், பரமக்குடி - 623707
B/O: 4/323, காந்திஜி ரோடு, கூட்டுறவு பால்பண்ணை எதிரில், பரமக்குடி - 623707

9566663133, 9994934265, 8870070127, 9789466661

எங்களிடம் மளிகை, அரிசி, கவரிங், பேன்சி, பிளாஸ்டிக், சில்வர் பொருட்கள்
இவை அனைத்தும் மிகக் குறைந்த விலையில் ஆனந்தமாய் வாங்க! ஆரஞ்சுக்கு வாங்க!!

aanmeegamalar.com

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

# உத்தரகோசமங்கை நடராஜர் வரலாறு

உத்தரகோசமங்கை மங்களநாதர் சுவாமி திருக்கோவில். இதுவே உலகின் முதல் சிவன் கோவில் என்று சொல்லப்படுகிறது. உத்தரகோசமங்கையில் இந்த மரகத நடராஜர் சிலை உருவானதே எதிர்பாராத நிகழ்வாகும். ராமேஸ்வரம் செல்லும் வழியில் மண்டபம் என்ற மீனவ கிராமப்பகுதி இருந்தது. அங்கு வசித்து வந்த சிவபக்தர் உத்தரகோசமங்கை மங்கள நாதசுவாமியை மிகுந்த நம்பிக்கையுடன் வழிபட்டு வந்தார். தினந்தோறும் பாய்மரப் படகில் கடலுக்கு சென்று மீன் பிடித்து வந்து வியாபாரம் செய்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

ஒரு நாள், அந்த சிவபக்தர் கடலில் மீன் பிடித்துக் கொண்டு இருந்த போது திடீரென கடலில்சூறாவளி காற்றுடன் பேய் மழை பெய்ய ஆரம்பித்தது. அதில் அவருடைய பாய்மரப்படகு நிலைகுலைந்து எங்கேயோ அடித்து சென்றது.

அப்படியே வெகுதூரம் சென்ற பிறகு, படகு ஒரு பாசிபடர்ந்த பாறையின் மேல்மோதி நின்று விட்டது. அதில் அந்த பாசி படர்ந்தபாறை அப்படியே சரிந்து மூன்று துண்டுகளாகஅந்த படகில் விழுந்துவிட்டது. பாறை சரிவதற்காகவே காத்திருந்தது போல், அது வரையில் அடித்து துவைத்து வந்த பேய் மழையும் நின்றது. சிவ பக்தர் அதிர்ச்சியிலிருந்து மீண்டு, மண்டபம் நோக்கி திரும்பி வருவதற்கு பார்த்தால், அவருக்கு எந்த திசையில் இருக்கி றோம் என்பது தெரியவில்லை.

உடனே அவர் தினமும் வணங்கி வரும் மங்களநாத சுவாமியை மனதில் நினைத்துக் கொண்டு, பலநாட்கள் கஷ்டப்பட்டு படகை செலுத்திக் கொண்டு மண்டபம் வந்து சேர்ந்தார்.

கடலுக்கு சென்றவர் இன்னும் திரும்பி வரவில்லை என்று காத்திருந்த சிவபக்தரின் உறவினர்கள், அவரை பார்த்ததும் நிம்மதி பெரு மூச்சு விட்டனர்.



சிவபக்தர் படகில் கொண்டு வந்த பாசி படர்ந்த பாறையை என்ன செய்வது என்று தெரியாமல், வீட்டுக்கு படிக்கல்லாக போட்டு வைத்தார். வீட்டுக்குள் சென்று வருபவர்கள் அந்த பாறைக்கல் மீது நடந்து நடந்து பாறை மேலிருந்த பாசி கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி, சூரிய வெளிச்சத்தில் பளபளவென்று மின்னத் தொடங்கியது. பாறை மின்னுவதை பார்த்த சிவபக்தர், அந்த மங்களநாதசுவாமி தான் தன்னுடைய வறுமையை போக்க அளித்த பரிசு என்று நினைத்தார்.

அந்த மின்னும் பச்சைப் பாறையை அரசருக்கு அன்பளிப்பாக அளித்தால் வறுமை நீங்கும் என்ற நல்லெண்ணத்துடன் பாண்டிய மன்னரின் அரண்மனைக்கு சென்றார்.

அங்கு தனக்கு நடந்த அனைத்தையும் விளக்கிக் கூறி, தன்னிடம் ஒரு பச்சைப்பாறை உள்ளது என்று தெரிவித்தார். பாண்டிய மன்னரும், சிவபக்தர் சொன்னதைக் கேட்டுஉடனடியாகஆட்களை அனுப்பி அந்த பச்சை பாறைக்கற்களை எடுத்து வரச் சொன்னார். கொண்டு வந்த அந்த பாறைக்கற்களை,அது பற்றிய விவரம் தெரிந்த ஆட்களை வைத்து சோதித்து பார்த்தார். பாறையை சோதித்து பார்த்த அவர்கள் மன்னரிடம், இது விலைமதிப் பற்ற அபூர்வ மரகதக் கல். உலகில் வேறு எங்கு தேடினாலும் நிச்சயம் கிடைக்காது என்று சொன்னார்கள். உடனே மன்னரும் சிவபக்தருக்கு பச்சை பாறைக்கற்களுக்கு உரிய பொற்காசுகளை வெகுமதியாக அளித்து வழியனுப்பி வைத்தார்.

சிவபக்தரை வழியனுப்பி விட்டு பாண்டிய மன்னர், இவ்வளவு விலைமதிப்பற்ற அபூர்வ மரகதக்கல்லில் ஒரு நடராஜர் சிலை வடித்தால் எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டு, நடராஜர் சிலை வடிக்க பலஇடங்களிலும் தேடி கடைசியில், இலங்கை மன்னன் முதலாம் கயவாகுவின் அரண்மனையில் சிற்பியாக இருக்கும் சிவபக்தரான ரத்தின சபாபதியைப் பற்றி கேள்விப்பட்டு, அவரை நடராஜர் சிலை வடிக்க அனுப்பி வைக்குமாறு இலங்கை மன்னருக்கு ஓலை அனுப்பினார். சிலை வடிக்க சிற்பியும் வந்து சேர்ந்தார். சிலையை வடிக்க அந்த பாறையை பார்த்த உடனேயே மயங்கி சரிந்தார். மன்னரிடத்தில் தன்னால் மரகத நடராஜர் சிலையை செய்ய முடியாது என்று பின்வாங்கி சென்றுவிட்டார்.

இதனால் மனமுடைந்த பாண்டிய மன்னர், அந்த மங்களநாத சுவாமி சன்னதி முன் நின்று

– தொடர்ச்சி 4ம் பக்கம்...



## உத்தரகோசமங்கை நடராஜர் வரலாறு

(3ம் பக்க தொடர்ச்சி...)



பிரார்த்தனை செய்தார். அப்போது நான் மரகத நடராஜர் சிலையை வடித்து தருகிறேன், மன்னா கவலை வேண்டாம் என்று ஒரு குரல் கேட்டது.

குரல் வந்த திசையை நோக்கி திரும்பிய மன்னர், அங்கே ஒரு மனதை மயக்கும் வகையில் ஒரு சித்தர் நிற்பதைக் கண்டார். அவர் தான் சித்தர் சண்முக வடிவேலர். உடனே மன்னரின் கவலை நீங்கியது. மரகத நடராஜர் சிலையை வடிக்கும் பொறுப்பை சித்தர் சண்முக வடிவேலரிடம் ஒப் படைத்தார். அதோடு அவருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தார்.

சித்தரும் அந்த பெரிய பாறையில் ஐந்தரை அடி உயர மரகத நடராஜரை ஒன்றரை அடி உயர பீடத்துடன் ராஜ கோலத்தில், மிகவும் நுணுக்கமாக, நடராஜரின் திருக்கரங்களில் உள்ள நரம்புகள் புடைக்க தெரியும் படி வடித்தார். பின்பு பாண்டிய மன்னரை அழைத்து முதலில் நடராஜ மூர்த்தியை பிரதிஷ்டை செய்த, பின்பு கருவறை அமைக்கும்படி அறிவுரை கூறினார். மன்னரும் அப்படியே செய்தார். இதனால் தான் பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்தும், முகலாயர்கள், ஆங்கிலேயர்கள் என பல படையெடுப்புகளையும் தாண்டி, இன்றைக்கும் கம்பீரமாக புன்னகை தவழும் முகத்துடன் ஆடவல் லான் ஆன நடராஜர் உத்தரகோசமங்கை மங்கள நாதசுவாமி கோவிலில் திருநடனம் புரிந்து வருகிறார்.

### திருஉத்தர கோசமங்கையில் சிவனடியார்களுக்கு அன்னதான சேவை செய்து வரும்

## ராமநாதபுரம் மங்கல நாதர் சிவனடியார்கள் திருக்கூட்டம்



உலகின் முதல் சிவாலயமான திரு உத்தரகோசமங்கையில் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து வழிபாடு செய்ய உத்தர கோசமங்கை வருகை தரும் சிவனடியார்கள் மற்றும் பக்த கோடி பெரும் மக்களுக்கு ராமநாதபுரம் மங்கள நாதர் சிவனடியார்கள் திருக்கூட்டம் சார்பில்

அன்னதானம் சேவையை சிறப்பாக செய்து வருகின்றனர். வரும் திரு ஆருத்ரா தரிசன விழாவை முன்னிட்டு ஜனவரி 2 ந்தேதி முதல் 3 ந்தேதி வரை இரண்டு நாட்கள் திரு உத்தர கோசமங்கையில் சிறப்பு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்து உள்ளனர். இதுதவிர இங்கு நடைபெறும் ஆருத்ரா விழா, சிவராத்திரி, தேரோட்டம் விழாக்களிலும் சிறப்பாக ராம நாதபுரம் மங்கள நாதர் சிவனடியார்கள் திருக்கூட்டத்தினர் அன்ன தானம் சேவையை சிறப்பாக செய்து வருகின்றனர்.

# பச்சேரி அருள்மிகு சிவகாமி உடனாகிய ஸ்ரீ நடராஜர் கோவிலில் 44-வது திருவாதிரை விழா







சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் பச்சேரி கிராமத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு சிவகாமி அம்பிகை உடனாகிய ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோவில் உள்ளது.

இங்கு பிரதோஷம், சிவராத்திரி பூஜைகள் மற்றும் நித்ய பூஜைகள் நடைபெறும். இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் ஆருத்ரா தரிசனம் சிறப்பு வாய்ந்ததாகும். அன்றைய தினத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு நடராஜர் வழிபாடு செய்வார்கள். வரும் 2 ந்தேதி வெள் ளிக்கிழமை 44ம் ஆண்டு திருவாதிரை விழா நடைபெறுகிறது.

வரும் ஜனவரி 2 ந்தேதி மார்கழி மாதம் 18ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் மஹா கணபதி ஹோமம் இரவு 7.00 மணியளவில் சிறப்பு அபிஷேகம் தீபராதனை நடைபெறுகிறது . மறுநாள் 3 ந்தேதி சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பிகை சமேத ஸ்ரீ நட ராஜப் பெருமானுக்கு

ஆருத்ரா தரிசனம் திருவாதிரை பெருவிழா நிகழ்ச்சி நடைபெறுகிறது. இருப்பதால் பக்தகோடிப் பெருமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு இறையருள் பெற விழாக் குழுவினர் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்.

03.01.2026 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் சிறப்பு அன்ன தானம் நடைபெறுகிறது. சமூக சேவகர் காங்கிரஸ் கமிட்டி மாநில பொதுச் செயலாளர் பச்சேரி சிஆர் சுந்தர்ராஜன், சிவ சிவ டிரேடர்ஸ், கன்ஸ்ட்ரஷன் அதிபர், மானாமதுரை வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் சிவசிவ ஸ்ரீதரன் ஆகி யோர் அன்னதானம் தொடங்கி வைக் கிறார்கள்.

விழா ஏற்பாடுகளை ஸ்ரீ நடராஜர் கோவில் நிர்வாகக்குழு மற்றும் பச்சேரி கிராமபொதுமக்கள் செய்து உள்ளனர். மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் திருப்பாச்சேத்தியில்

இருந்து பச்சேரி எளிதாக செல்ல லாம். மதுரை சிவகங்கை ஆகிய ஊர்களில் இருந்து நேரடி பஸ் வசதி உள்ளது.ஆலய தொடர்புக்கு 9841574874

# இறைவனே இறைவனிடம் உபதேசம் பெற்ற ஸ்தலங்கள்

இறைவனிடம் இறைவன் உபதேசம் பெற்ற முக்கியத் திருத்தலங்களும், உபதேசித்த இறைவனும், உபதேசம் பெற்ற இறைவனும்*

- ஓமாம்புலியூர்– தட்சிணாமூர்த்தி உமாதேவிக்கு பிரணவப்பொருள் உபதேசித்தது.
- உத்திரகோசமங்கை பார்வதிக்கு இறைவன் வேதா கமலங்களின் இரகசியங்களை உபதேசித்தல்.
- இன்னம்பர்–அகத்தியர் வழிபாட்டு இலக்கண உபதேசம்பெற்றது.
- திருவுசாத்தானம் இராமர் சேது அணை கட்டுவதற்கு இத்தலத்து இறைவனிடம் மந்திர உபதேசம் ராமர் பெற்றார்.
- ஆலங்குடி சுந்தரர் தட்சிணா மூர்த்தியை வழிபட்டு பஞ்சாட்சர உபதேசம் பெற்றார். மற்றும் ஆதி சங்கரர் குருபகவானை தரிசித்து மகாவாக்கிய உபதேசம் பெற்றார்.
- திருவான்மியூர் அகத்தியருக்கு மூலிகை {வைத் தியம்} பற்றி உபதேசம் அருளியது.
- திருவாவடுதுறை அரிக்கும் அந்தணர்களுக்கும் சிவஞான உபதேசம் செய்தல், மற்றும் போகர் முதலிய நவகோடி சித்தர் களுக்கு அஷ்டமா சித்தி அருளியது.
- சிதம்பரம் பைரவர் பிரம்ம தத் துவத்தை உபதேசித்தல்.
- திருப்பூவாளியூர் நுன்முனிவர் 70 பேருக்கு பரஞான உபதேசம்.
- திருமங்களம் சௌமினி முனி வர்க்கு சாமவேதம் உபதேசம்.
- திருக்கழு குன்றம் சனகர் முதலிய முனிவர்க்கு சாமவேதம் உபதேசம்.
- திருமயிலை 1000 முனிவர்கள் அறநெறிகளை அறிவுறையாக பெற்றது.
- செய்யாறு வேதம் பற்றி கருப்பொ ருள் பற்றி தவசிகள் பலருக்கு அருளுரை.
- திருவெண்காடு நான்முகன் குருமூர்த்தியிடம் ஞானோப தேசம் பெற்றது, அம்பாள் பிரம் மனுக்கு பிரம்ம வித்தையை உபதேசித்ததால் பிரம வித் யாம்பிகை என்று பெயர்.
- திருப்பனந்தாள் அம்பாள்ஸ்வாமி யிடம் ஞானோபதேசம் பெற்றது.
- திருக்கடவூர் பிரம்மன் ஞானோ பதேசம் பெற்றது.
- திருவானைக்கா அம்பிகை ஞானோபதேசம் பெற்றது.
- மயிலாடுதுறை குருபகவானிடம் நந்தி உபதேசம் பெற்றது.
- திருவாவடுதுறை அகத்தியமுனி வர்க்கு பஞ்சாட்சரம் உபதேசம்.
- தென்மருதூர் 1000 முனிவர்க்கு உபதேசம் அருளியது.
- விருத்தாசலம் இறப்பவர்க்கு இறைவன் அவ்வுயிரை தன் தொடைமீது கிடத்தி மந்திர உப தேசம் மற்றும் இறைவி தன் முந் தானையால் விசிறி விடுதல்.
- திருப்பெருந்துறை மாணிக்கவாச கருக்கு குருத்த மரத்தடியில் உபதேசம்.
- உத்தரமாயூரம் ஸ்ரீ மேதா தட்சி ணாமூர்த்தி ரிஷபதேவரின் கர் வம் அடக்கி உபதேசம் செய்தது.
- காஞ்சி ஸப்தரிஷிகளுக்கு உப தேசம்.
- திருப்புறம்பயம் சனகாதி முனி வர்களுக்கு தர்மோபதேசம்.
- விளநகர் அருள் வித்தன்என்னும் மறையவருக்கு ஞானோபதேசம்.
- திருத்துருத்தி சிவன் பிரம்மசாரி யாய் வேதத்தைதாமேசொன்னது.
- திருவோத்தூர் ஈசன்தேவர்களுக் கும் வேதத்தை உபதேசித்தல்






KMANIS®

திருஉத்தரகோசமங்கை ஆருத்ரா தரிசனம் காண வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

உ

ஸ்ரீ ஆதிகோரக்கி நாதர் துணை

98654 98333

மணி நாட்டு மருந்து கடை

எல்லா விதமான நாட்டு மருந்துகள், முகத்தில் வரும் கருப்பு, கருவளையம், முகப்பொழிவுக்கு சிறந்த ஆயுர்வேத கிரீம்கள், ஆண்மை சம்பந்தமான பொருள்கள், குதிக்கால்வலி, முழங்கால் வலிகளுக்கு சிறந்த ஆயுர்வேத மருந்துகள் கிடைக்கும்

வாடிக்கையாளர்கள் உள்ளே வந்து மூலம் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம்

12, அரண்மனை, ராஜவீதி, பார்வதி நெய்கடை, பீம விலாஸ் அருகில் இராமநாதபுரம்

# சந்ததியினருக்கு நன்மை தரும் நான்கு ராமேஸ்வரங்கள்

1. **ராமேஸ்வரம்,**
2. **திருராமேஸ்வரம்,**
3. **குருவிராமேஸ்வரம்,**
4. **காமேஸ்வரம்,**

ஆகிய நான்கும் சதுர்த்த ராமேஸ்வரம் எனப் போற்றப்படுகின்றன.

இந்த நான்கு திருத்தலங்களிலும் மகா கணபதிக்கான `சதுராவ்ருத்தி தர்ப்பணம்' எனும் விசேஷமான பூஜையை, ஆகமப் பூர்வமாக அகத்தியரின் முன்னிலையில், ஸ்ரீராமபிரான் நிகழ்த்தியாக ஞானநூல்கள் சொல்கின்றன.

தொடர்ந்து நான்கு மாதங்கள்

ஒவ்வொரு மாதத்தின் அமாவாசை திதியில் ஒரு திருத்தலம் என்ற கணக்கில்,

ராமேஸ்வரம் தொடங்கி இந்த நான்கு தலங்களுக்கும் சென்று, இறை தரிசனத்தோடு பிதுர் வழிபாடு செய்து வருவது மிகவும் விசேஷம்.

இதனால், நமக்கும் நம் சந்ததியினருக்கும் சகல நன்மைகளும் உண்டாகும்.

## ராமேஸ்வரம்

தென்னாட்டு புண்ணிய க்ஷேத்திரங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ராமேஸ்வரத்தின் மகிமைகளும் திருக்கதைகளும் நம்மில்பெரும்பாலானோர் அறிந்தவையே. ஆகவே, இத் தலம் குறித்த அபூர்வ தகவல்களைத் தெரிந்துகொள்வோம்.

ஸ்ரீராமர் ஸ்ரீ சீதாதேவி இருவரும் ராமேஸ்வரம் கடற்கரையில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபடுவதற்கு முன்பே, இந்தத் திருத்தலம் `அக்னித் தீர்த்த நீராடல்' தலமாக, வெவ்வேறு திருப்பெயர்களில் பிரசித்தி பெற்றிருந்ததாம்.

இங்கிருந்து தனுஷ்கோடிக்குச் செல்லும் பாதையில், சுமார் 4 கி.மீ தொலைவில் கோயில் கொண்டிருக்கிறாள் நம்புநாயகி அம்பிகை. நம்பு, நம்பன், நக்கன் என்றால் ஈஸ்வரனையே குறிக்கும். இந்த நம்புநாயகி அம்மன் கோயிலிலிருந்து சிறிது தூரத்தில் ஜடாயு தீர்த்தம் உள்ளது.

ஸ்ரீராமர் நீராடிய ஜடாயு தீர்த்தத்தின்மகத்துவத்தை சுகபிரம் மருக்கு வியாசர் விளக்கியுள்ளார்.



நம்புநாயகி அருளும் பூமியும், ஜடாயு தீர்த்தமும் ராமநாத சுவாமிப் பிரதிஷ்டைக்கும் மூத்தவை.

அதேபோல், ராமேஸ்வரம் சிவாலயத்தில் சேதுமாதவ பெருமாள் சந்நிதி அருகில்புண்ணிய தானேஸ்வரர், பாபபட்சேஸ்வரர் சந்நிதிகளும் உண்டு.

ராமநாத ஸ்வாமியைத் தரிசிக்கச் செல்லும் அன்பர்கள், இந்த மூர்த்திகளையும் அவசியம் தரிசித்து வாருங்கள்.

கால விரயம், பொருள் விரயம் செய்ததால் ஏற் படும் பிரச்னைகளும், அறியாத வகையில் தவறான வழிகளில் பொருளீட்டியதால் ஏற்பட்ட பாவங்களும், பித்ரு தோஷங்களும் நீங்கிட ராமேஸ்வரம் சென்று வழிபடவேண்டும். இங்கு ஒரே நாளில் 32 தீர்த்தங்களில் நீராடுவது விசேஷம்.

## திருராமேஸ்வரம்

மன்னார்குடி – திருத்துறைப்பூண்டி மார்க்கத்தில், சுமார் 22 கி.மீ தொலைவில் உள்ள திருத்தலம் திருராமேஸ்வரம். சீதாதேவிக்கு, அவள் மகா லட்சுமியின் அவதாரம் என்று ராமபிரான் உணர்த்திய திருத்தலம் என்பார்கள்.

திருமகள், சீதாலட்சுமியாக சிவலிங்க மூர்த்தத்துக்கு பூஜை செய்யும் அபூர்வ திருக்கோலத்தை இங்கே தரிசிக்கலாம். வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும், துவாதசி மற்றும் பஞ்சமி திதி நாள்களிலும், அனுஷ நட்சத்திர நாளன்றும், இங்கு உரலில் மஞ்சள் இடித்து மங்களாம்பிகைக்குச் சாற்றி வழி படுவார்கள்.



இதனால் மங்கலகரமான வாழ்வு ஸித்திக்கும்என்பது நம்பிக்கை. சுவாமியின் திருப்பெயர் ஸ்ரீராமநாதஸ்வாமி. ஏமாந்து இழந்த பொருள் மற்றும் சொத்துகளை மீட்டெடுக்க அருள் வழங்கும் தலம் என்பார்கள் பெரியோர்கள்.

இங்கு, தீர்த்த நீராடல் விசேஷமானது.

## குருவி ராமேஸ்வரம்

திருவாரூரிலிருந்து கிழக்கே சுமார் 4 கி.மீ தொலைவில் உள்ளது குருவி ராமேஸ்வரம்; கேக்கரை எனும் ஊர் வழியாகச் செல்லலாம். ஸ்ரீராமர், குருவிக்கு முக்தி தந்தத் தலம். இத்தலத்துக்கு திருப்பள்ளிமுக்கூடல் என்றும் திருப்பெயர் உண்டு.

இங்கே அருள்பாலிக்கும் இறைவன் ஸ்ரீமுக்கோணநாதேஸ்வரர்; அம்பாளின் திருநாமம் ஸ்ரீஅஞ்சனாட்சி. ஜடாயுவுக்கு அவரதுமுக்தியை குறித்து ஈஸ்வரன் எடுத்துரைத்த தலம் இது.

அப்போது, ராவணனால் நான் மடிந்தால், புண்ணிய தீர்த்தங் களில் நீராடிய பலன் கிடைக்காமல் போகுமே' என்று வருந்தினாராம் ஜடாயு. அவருக்காக இங்கே இறைவன் உருவாக்கிய தீர்த்தமே திருமுக் கூடல் தீர்த்தம் என்கின்றன ஞானநூல்கள்.

ராமாவதாரத்துக்கு முன்பே ராம நாமத்தை ஜபித்து வாழ்ந்தவர்கள் `ராமகே(தி)'. இவர்கள் திரேதா யுகத்தில் பல்லாயிரக்கணக்கில் வசித்த `ராமகே' எனும் இடமும் கயாவுக்குச் சமமாகப் போற்றப்படும் கேக்கரையும் குருவி ராமேஸ்வரத் தின் அருகிலிருப்பது விசேஷம்.

## காமேஸ்வரம்

நாகப்பட்டினம் – வேதாரண்யம் இடையே அமைந்திருக்கிறது, காமேஸ்வரம். புனிதமான அரிச்சந்திரா நதி, கடலில் கலக்கும் பிதுர்முக்தி பூமி காமேஸ்வரம்.

சிவாலயம், விஷ்ணு ஆலயம் இரண்டும் அமைந்த க்ஷேத்திரம்.

இதன் தொன்மைப் பெயர் `ராமேஸ்வரராமேஸ் வரம்'. பின்னர் காமேஸ்வரம் என்றாயிற்று.

நல்லவிதமானவிருப்பங்களுக்கு ‘காமம்’ என்றுபொதுப் பெயர் உண்டு.அப்படியான நம்முடைய நல்ல விருப்பங்களை நிறைவேற்றும் திருத்தலம் இது என்றும் சொல்லலாம். அருள் மிகு காமேஸ் வரரும், காமாக்ஷி அம்பிகையும் அருளும் இந்தத் தலத்தில், திரேதா யுகத்தில் ராமனும், துவாபர யுகத்தில் கிருஷ்ணனும் வழிபட்டுள்ளார்கள்.

வாழ்வில் அறிந்தோ அறியாமலோ நாம் சொன்ன பொய்யுரைகளால் ஏற்பட்ட பாவங்கள், நமது வாக்கால் ஏற்பட்ட தோஷங்கள் நீங்குவதற்கு வழிபட வேண்டிய திருத்தலம் இது. இந்தக் காமேஸ்வரம் திருத்தலத்துக்குச் சென்று, அரிச்சந்திரா நதி கடலில் சங்கமமாகும் பகுதியிலோ, காமேஸ்வரம் கடற்கரையிலோ நீராடுவதால் பாவங்கள் நீங்கும்; வாழ்க்கை செழிக்கும்.






# பிரதோஷ வழிபாடும், பயன்களும்

ஒவ்வொரு மாதமும் திரயோதசி திதியில் (தேய்பிறை மற்றும் வளர் பிறை) மாலை 4:30 மணி முதல் 6:00 மணி வரையிலான நேரம் பிரதோஷ காலம் என அழைக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் சிவபெருமான் நந்தி தேவரின் கொம்புகளுக்கு இடையில் தாண்டவம் ஆடுவதாக ஐதீகம்.

பிரதோஷ காலத்தில் சிவபெருமானை தரிசிப்பதும், நந்தீஸ்வரரை வழிபடுவதும் பல்வேறு நன்மைகளைத் தரும். இந்த நேரத் தில் அனைத்து தேவர்களும் சிவ பெருமானை வழிபட ஆலயம் வருவார்கள் என்பது நம்பிக்கை.

இந்த சமயத்தில் சிவ வழிபாடு செய்பவர்களுக்கு சிவ பெருமானின் அருளுடன், முப்பத்து முக்கோடி தேவர்களிடம் அருளும், ஆசியும் கிடைக்கும். இதனாலேயே பிரதோஷ விரதம் இருந்து சிவ வழிபாடு செய்தால் வாழ்க்கையில் மாற்றங்களும், நன்மைகளும் ஏற்படும் என சொல்லப்படுகிறது.



## பிரதோஷ விரத பலன்கள்

பிரதோஷ தரிசனம் செய்வதால் நமது பாவங்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.

ஜாதகத்தில் உள்ள தோஷங்கள், குறிப்பாக சனி தோஷம், ராகுகேது தோஷங்கள் விலகும்.

சகல நன்மைகளும் உண்டாகும், மகிழ்ச்சி பெருகும்.

கடன் தொல்லைகள் நீங்கும், ஆரோக்கியம் மேம்படும்.

தொடர்ச்சியாக பிரதோஷ விரதத்தை மேற்கொள்வதால் முக்தி கிடைக்கும் என்பது ஐதீகம்.

## கிழமைகளுக்குரிய பிரதோஷ பலன்களும்

### ஞாயிறு பிரதோஷம்

சூரிய திசை நடப்பவர்கள் அல்லது சூரியனால் ஏற்படும் பாதிப்புகள் உள்ளவர்கள் வழிபட நல்லது. பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரும்.

### திங்கள் (சோமவார) பிரதோஷம்:

சந்திர திசை நடப்பவர்கள் அல்லது சந்திரன் பலவீனமாக உள்ளவர்கள் வழிபட ஏற்றது. மன நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும், மன வலிமை பெருகும். இது மிகவும் சிறப்பு வாய்ந்த பிரதோஷமாக கருதப்படுகிறது.

### செவ்வாய் பிரதோஷம்

செவ்வாய் திசை நடப்பவர்கள் அல்லது செவ்வாயால் ஏற்படும் பாதிப்புகள் உள்ளவர்கள் வழிபடலாம். கடன்தொல்லை நீங்கும், பித்ரு தோஷம்_விலகும்.

### புதன் பிரதோஷம்

புதன் திசை நடப்பவர்கள் அல்லது புதனால் ஏற்படும் பாதிப்புகள் உள்ளவர்கள் வழிபட நல்லது. கல்வி சிறக்கும், அறிவு வளரும், புத்திரப் பேறு கிட்டும்.

### வியாழன் பிரதோஷம்

குருவால் ஏற்படும் நன்மைகளைப் பெறவும், குருவருள் மற்றும் திருவருள் கைகூடவும் வழிபடலாம்.

### வெள்ளி பிரதோஷம்

எதிர்ப்புகள் நீங்கும், சுபிட்சம் உண்டாகும்.

### சனி பிரதோஷம் (மகாபிரதோஷம்)

அனைத்து பிரதோஷங்களிலும் மிகவும் சிறப்பு வாய்ந்தது சனி பிரதோஷம். இந்த நாளில் சிவனை தரிசித்தால் சகல பாவங்களும் நீங்கி புண்ணியங்கள் சேரும். இந்திர னுக்கு நிகரான செல்வமும், புகழும் கிடைக்கும். பிறப்பே இல்லாத முக்தி யை அளிக்கும் வல்லமை வாய்ந்தது.

## பிரதோஷ தரிசனமும், பலன்களும்

- 3 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலான மூன்று தெய் வங்களையும் பார்ப்பதற்கு சமம்.
- 5 பிரதோஷங்கள் தொடர்ந்துபார் த்தால் உடலில் உள்ள அனைத்து நோய்களும் நீங்கும்.
- 7 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் திருமணமாகதவர் களுக்கு திருமணம் நடக்கும்.
- 11 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் உடலும், மனமும் வலி மை பெற்று புது தெம்பு கூடும்.
- 13 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் நினைத்த காரியம் தங்கு தடையின்றி நடைபெறும்.
- 21 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் புத்திர பாக்கியம் கிடைக்கும்.
- 33 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் சிவன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்த புண்ணியம் கிடைக்கும்.
- 77 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் ஒரு யுத்ரயாகம் செய்த பலன் கிடைக்கும்.
- 108 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் ஒரு தேவேந்திர பூஜை நடத்தியதற்கு சமம்.
- 121 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் அடுத்த ஜென்மம் கிடையாது.
- 1008 பிரதோஷங்கள் தொடர்ந்து பார்த்தால் ஒரு அஷ்வமேத யாகம் நடத்தியதற்கு சமம்.

## பிரதோஷ வழிபாட்டு முறை

பிரதோஷ தினத்தில் காலையில் நீராடி, சிவ நாமங்களையோ "#ஓம் நமசிவாய" மந்திரத்தையோ ஜபிக்கலாம். நேரம் இருந்தால் #சிவபுராணம் படிக்கலாம்.

மாலை பிரதோஷ நேரத்தில் (4:30 6:00 மணி) சிவன் கோவிலுக்கு சென்று, நந்தி தேவருக்கு அருகம் புல் மாலை சார்த்தி, நெய் தீபம் ஏற்றி வழிபட வேண்டும். நந்தியின் கொம்புகளுக்கு இடையில் சிவபெருமானை தரிசிப்பது மிகவும் சிறப்பு.

பின்னர் சோமசூக்தப் பிரதட்சிணம் (நந்தியைச் சுற்றி வலம் வருவது) செய்து, சிவபெருமானை வில்வத்தால் அர்ச்சித்து வழிபடலாம். நம் குறைகள் அனைத்தையும் மனம் உருக வேண்டி, விரதத்தை முடித்து, இயன்றவரை அன்னதானம் அல்லது ஏழைகளுக்கு உதவி செய்வது சிறப்பு.


பாண்டியநாடு அறக்கட்டளை
Govt.Reg.No : 8688 / 22

பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வுக்குழு

தமிழகத்தின் தொன்மையான பாண்டியர் வரலாற்றை கல்வெட்டு சேகரிப்பு, வாசிப்பு, மொழி பெயர்ப்பு ஆவணப்படுத்துதல் மற்றும் ஆய்வு ஆகிய அறிவியல் முறைகள் மூலம் வரலாற்று உண்மைகளாக வெளிக்கொணரும் ஒரு முழுமையான வரலாற்று ஆய்வு இயக்கம்

- கள ஆய்வுகள்
- கல்வெட்டு கண்டறிதல், வாசிப்பு, விளக்கம்
- கல்வெட்டு தட்டச்சு, மொழி பெயர்ப்பு, ஆவணப்படுத்துதல்
- வரலாற்று ஆவணங்கள், செப்பேடுகள், இலக்கிய ஆதாரங்கள் சேகரிப்பு
- ஆய்வு கருத்தரங்குகள் & விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வரலாற்றில் ஆர்வமுள்ள ஆய்வாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து பயணிக்கலாம். வரலாற்றைத் தேடி - வரலாற்று அடையாளங்களை மீட்கும் பயணம்

தொடர்புக்கு : 90420 09427
Website : www.pandyadynasty.com

பாண்டியநாடு சித்தா & வர்மா மருத்துவமனை

பாண்டியர் கால மருத்துவமரபு முறைப்படி, சித்தர்கள் வழிகாட்டுதல்படியும், ஓலைச்சுவடிகள் மற்றும் கல்வெட்டு ஆதாரங்களில் இருந்து எடுக்கப்பட்ட மருத்துவ முறைகளை அறிவியல் ஒழுங்குடன் நடைமுறைப்படுத்தும் ஒரு நம்பகமான சித்தா & வர்மா மருத்துவ சேவை மையம்

- சித்த மருத்துவம்
- வர்ம சிகிச்சை
- மூட்டு, முதுகு, கழுத்துவலி சிகிச்சை
- நரம்பு சம்பந்தமான நோய்கள்
- நீண்டகால நோய்களுக்கு பக்கவிளைவில்லா இயற்கைமுறை சிகிச்சை
- பாரம்பரிய சித்த மருந்துகள் & வாழ்க்கைமுறை ஆலோசனை நோயின் மூலக்காரணத்தை அறிந்து உடலை முழுமையாக குணப்படுத்தும் பாரம்பரிய மருத்துவ அணுகுமுறை

"பாரம்பரியம் எங்கள் அடையாளம் ஆரோக்கியமே எங்கள் இலக்கு"

தொடர்புக்கு : 93451 20316
G-mail : www.pandiyanadutrust@gmail.com

இனிய புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துகள்!!!







நல்லாசிரியர்
ச.வெங்கடேசன்
தாளாளர்
ரூபி கல்வி குழுமம்

RUBY MATRICULATION Hr. Sec. SCHOOL
READ RESTORE REALISE

திருமதி.வெ.சங்கீதா
முதல்வர் ரூபி மெட்ரிக் பள்ளி

திரு.எம்.ஜி.ராஜமாணிக்கம் IAS
அரசு செயலர்,
வருவாய் பேரிடர் மேலாண்மை மற்றும் அறநிலையத்துறை,
கேரளா மாநிலம்





புலவர்.வை.சங்கரலிங்கனார்
தமிழ்ச்செம்மல் முதன்மை முதல்வர்

ரூபி மெட்ரிகுலேஷன் பள்ளி
திருவள்ளுவர் தெரு, பழங்காநத்தம், மதுரை

இளங்கோவடிகள் முத்தமிழ் மன்றம்
மதுரை




# பக்தனின் அன்புக்கு கட்டுப்பட்டு கால் மாறி ஆடிய நடராஜர்

தில்லை அம்பல நடராஜர் இடதுகாலைத் தூக்கி ஆனந்த நடனமிடும் திருகாட்சியை சிதம்பரம் திருக்கோயிலில் கண்டு மெய் சிலிர்த்து மகிழ்ந்திருப்போம். பொதுவாகவே நடராஜர் எல்லாத் திருத் தலங்களிலும் இதே போன்றுதான் காட்சியளிக்கிறார். இந்த நினைப்போடு மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்குச் செல்பவர்களை நடராஜர் சற்று வித்தியாசமாக வரவேற்கிறார்.

ஆமாம், இந்தத் தலத்தில் அவர் வலது காலைத் தூக்கி களிநடனம் புரிகிறார். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வெள்ளியம்பலத்தில் இவ்வாறு அவர் வித்தியாச கோலம் காட்டுவதன் அடிப்படை என்ன? நடராஜர் ஐந்து நடன சபைகளில் திருநடனம் புரிகிறார்.

சிதம்பரத்தில் பொன்னம்பல சபையில் இவர் ஆனந்தத்தாண்டவம் ஆடி பக்தர்களை மகிழ்விக்கிறார். மதுரை மீனாட்சியம்மன் கோயில் இருப்பது வெள்ளியம்பலம். இங்கு அவர் ஆடுவது சந்தியா தாண்டவம். திருநெல்வேலியில் இருப்பது தாமிரசபை.

இங்கு ஆடுவது முனி தாண்டவம். குற்றாலத்தில் இருப்பது சித்திரசபை. இங்கு அவர் ஆடுவது திரிபுரதாண்டவம். திருவாலங்காட்டில் இருப்பது ரத்தினசபை. இங்கு ஆடுவது காளிதாண்டவம். இந்த ஐந்து நடன சபைகளில் மதுரையில் மட்டும் நடராஜர் இடது கால் ஊன்றி வலது கால் தூக்கி சந்தியா தாண்டவம் ஆடுகிறார். இந்த நிகழ்ச் சியை பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணத்தில் 24வது படலமாக இடம் பெற்றிருக்கிறது.





சிதம்பரம் நடராஜர் மதுரை நடராஜர்

இப்படி புராணத்திலேயே விவரிக்கப்படும் வகையில் நடராஜர் கால் மாறி ஆடியதன் காரணம்தான் என்ன? மதுரையில் மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேஸ்வரருக்கும் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது. இந்த தெய்வீகத் திருவிழாவில் தேவர்கள், முனிவர்கள் என அனைவரும் பங்கேற்றனர். தெய்வீகத்தம்பதியின் அருள் வேண்டி காத்திருந்தனர். திருமண வைபவம் முடிந்து அனைவரையும் உண வருந்த வருமாறு சுந்தரேஸ்வரரும், அன்னை மீனாட்சியும் அனைவரையும் அழைத்தனர்.

அப்போது பதஞ்சலி முனிவரும், வியாக்ர பாதரும் ஈசனிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தனர்: ‘ஐயனே, நாங்கள், தினமும் தங்களது பொன்னம்பல நடனத்தை தரிசித்த பிறகுதான் உணவு அருந்துவது வழக்கம்; அதனை இன்றும் கடைபிடிக்க விரும்புகிறோம், தாங்கள்தான் அருள்புரிய வேண்டும்’ இதை கேட்ட இறைவன், அவர்களின் நியமத்தைக் காக்க விரும்பினார். அதேசமயம் அவர்களை சிதம்பரத்திற்குச் சென்றுவரப் பணிக்கவும் அவர் விரும்பவில்லை. அவர்களிடமேசிதம்பரத்தை வரவழைக்க பெருங்கருணை கொண்டார்.

ஆமாம், மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலேயே தான் திருநடனம் புரிந்துஅருள் பாலிக்க, இந்தத் தலத்திலேயே வெள்ளியம்பலத்தை ஏற்படுத்தினார்! அந்த அம்பலத்தில் திருநடனமும் புரிந்தார்.

இறைவனின் திருநடனத்தை கண்ட பதஞ்சலியும் வியாக்ரபாதரும் பெருமகிழ்வடைந்து உணவு அருந்தினர். இந்த மதுரைப் பெருநகரை விக்ரம பாண்டியன் ஆட்சி புரிந்துவந்தான். அவனுடைய மகன் ராஜசேகர பாண்டியனுக்கு ஒரு குறை.

ஆமாம், ஆயக்கலைகள் அறுபத்து நான்கில் 63 கலை களில் தேர்ச்சி பெற்றிருந்த அவர் மீதமுள்ள ஒரே கலையான நடனத்தில் மட்டும் தேர்ச்சி பெறாதிருந்தான். அதற்குக் காரணம், நடராஜப் பெருமான் ஆடும் கலையாயிற்றே அது. அதை எப்படி தான் கற்பது என்ற பக்தி மேலீடுதான். ஆனால், அவனுடைய சமகாலத்தவனான கரிகாற்சோழன், அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுத் தேர்ந்தவன் என்ற தகவல் ராஜசேகர பாண்டியனுக்குக் கிடைக்கிறது.

உடனே இறைவனுக்கு உரியதான நாட்டியக் கலை, அவனது பக்தர்களும் கற்று மேன்மையுற வேண்டிய ஒன்றுதான் என்பதை உணர்ந்துகொண்டு, தானும் நடனம் கற்று அதில் முழுமையாக தேர்ச்சியும் பெற்றான். அப்படி தேர்ச்சி பெற்ற அவன், அந்தக் கலை எத்தகைய உடல் நலிவை, சோர்வைத் தருகிறது என்பதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தான். நிறைவாக, தான் கற்ற இந்த நாட்டியக் கலைக்கு இறைவனுடைய அருள் வேண்டும் என்பதால் மதுரை வெள்ளியம்பல நடராஜரிடம் ஆசீர்வாதம் பெற வந்தான்.

நடராஜரைப் பார்த்த அவன் அப்படியே திகைத்து நின்றான். நடனத்தை உடல் சோர்வளிக்கும் கலையாகத் தன் அனுபவத்தில் அறிந்திருந்த அவன், காலம் காலமாகவலக் காலை ஊன்றி இடக்காலைத் தூக்கி நடனமாடி கொண்டிருக்கும் நடராஜருக்கு எவ்வளவு துன்பமாக இருக்கும் என நினைத்து மிகவும் வேதனையடைந்தான். ‘அடடா, அவரது வலதுகால்தான் எவ்வளவு வலிக்கும்’ என்று வருந்திய அவன், இதை யாரிடம் எப்படி கேட்பது என்று யோசித்தான்: ‘ஈசனிடமே நேரடியாக முறையிட்டுவிடலாமா?

ஆனால் தேவர்கள், முனிவர்கள் என்று மேன்மக்கள் பலரும் இதைப் பற்றி சிந்திக்காதபோது நாம் சிவனிடம் கேட்பது அதிகப் பிரசங்கித்தனமாகாதா?’ இந்த சூழலில் சிவ ராத்திரி திருவிழா வந்தது. மன்னன் நான்கு கால பூஜை முடித்து விட்டு நடராஜரின் எதிரில் நின்றான் ராஜசேகர பாண்டியன். இடது பாதம் தூக்கி வலது பாதத்தில் நின்று கொண்டிருந்த ஈசனைப் பார்த்து கண்களில் நீர் பெருக்கினான். ‘இறைவா, உனக்குக் கால் வலிக்கிறதோ இல்லையோ, எனக்குப் பெரிதும் வலிக்கிறது. எனக்காக கால்மாறி ஆடக் கூடாதா?’ என்று மனம் உருக வேண்டினான்.

இறைவன், மன்னனை மேலும் சோதிக்கும் விதமாக சலனமின்றி நின்றிருந்தான். ‘அப்படி நீ கால் மாறி ஆடாவிட்டால், என் முன்னால் ஒரு கத்தியை நட்டுவைத்து அதன்மீது விழுந்து உயிர் துறப்பேன்,’ என்று மிரட்டலாய் மன்றாடினான் மன்னன்.

சற்றே கண்மூடி மீண்டும் திறந்தபோது அப்படியே மெய்சிலிர்த்துப் போனான். ஆமாம், பக்தனுக்காக இடது காலை ஊன்றி, வலது காலைத் தூக்கி ஆடிக்கொண்டிருந்தார் நடராஜப்பெருமான்! ‘எனக்காகக் கால் மாறி ஆடிய பெருமானே, இதே திருக்கோலத்தில் பக்தர்கள் அனைவருக்கும் தரிசனம் தந்தருள வேண்டும்,’ என்று நெகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டான் மன்னன்.

அன்றிலிருந்துதான் மதுரை வெள்ளியம்பல நடராஜர் கால் மாறி ஆடியபடி திவ்ய தரிசனம் அருள்கிறார். நடராஜரின் கால் மாறி ஆடிய இந்த சந்தியா தாண்டவம் பற்றி பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த வல்லாளசேன மன்னரின் ‘நைக்தி செப்பு பட்டய’த்தில் குறிப்பு காணப்படுகிறது. பதினான்காம் நூற்றாண்டை சேர்ந்த ஸ்ரீசைலம் கோயிலில், ஆனந்த தாண்டவத்தை போன்ற சந்தியாதாண்டவ சிற்பம் உள்ளது என்றும் தகவல் உள்ளது.

நடராஜப் பெருமான் இவ்வாறு ஆடிக் கொண்டே இருப்பதால் தான் உலகத்தின் இயக்கம் இயற்கையை ஒட்டி இயல்பாக இருக்கிறது. இந்த நடராஜருக்கு நிகழ்த்தப்படும் ஆனி மாத திருமஞ்சனம் மிகச் சிறப்பான ஒன்று. தேவர்களின் பகல்பொழுதாகக் கருதப்படும் காலகட்டத்தில் கடைசி பகுதிதான் ஆனி மாதம். இந்த மாத உத்திர நட்சத்திர தினத்தன்று தேவர்கள் இறைவனுக்கு மாலை நேர பூஜை செய்வதாக ஐதீகம். அப்போது சிவன் கோயில்களில் நடராஜப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

வெம்மை மிகுந்த சுடலையின் சூடான சாம்பலை திருமேனியில் தரித்து, எப்போதும் திருக்கரத்தில் அக்னியையும் ஏந்தியிருப்பதால் நடராஜர் கடுமையான வெப்பத்தால் சூழப்பட்டிருக்கிறார். இந்த வெப்பத்தை தணிக்க வருடத்திற்கு ஆறுமுறை அவருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இவற்றில் ஆனி திருமஞ்சனம் தனிச் சிறப்புடையது.

ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994323622 / 9994162182
♦♦♦
துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.
♦♦♦
வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



உங்கள் பகுதி
கோவில் கும்பாபிஷேகம்,
விழாக்கள், போன்றவற்றை
இதுபோன்ற
சிறப்பு மலராக
வெளியிட தொடர்பு
கொள்ளவும்
தரமாகவும்,
சிறப்பாகவும்
செய்து தருகிறோம்...!
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203


பக்தகோடிகளை
அன்புடன்
அழைக்கிறோம்
மதுரை கலையகம்
கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள்,
பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.

V.சுந்தரவடிவேல்
Visit:
www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939
27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1


# 2026ம்–ஆண்டு பௌர்ணமி திருவண்ணாமலை கிரிவலம் செல்ல உகந்த நேரம்



| பௌர்ணமி நாட்கள் | கிரிவலம் துவங்கும் நாள், நேரம் | கிரிவலம் நிறைவு செய்யும் நாள், நேரம் |
|---|---|---|
| ஜனவரி 03 | ஜனவரி 02 மாலை 06.11 மணி | ஜனவரி 03 மாலை 04.07 மணி |
| பிப்ரவரி 01 | பிப்ரவரி 01 காலை 05.34 மணி | பிப்ரவரி 02 காலை 04.05 மணி |
| மார்ச் 03 | மார்ச் 02 மாலை 05.59 மணி | மார்ச் 03 மாலை 05.21 மணி |
| ஏப்ரல் 01 | ஏப்ரல் 01 காலை 07.23 மணி | ஏப்ரல் 02 காலை 07.44 மணி |
| மே 01 | ஏப்ரல் 30 இரவு 09.50 மணி | மே 01 இரவு 11.07 மணி |
| மே 31 | மே 30 பகல் 12.58 மணி | மே 31 பகல் 02.50 மணி |
| ஜூன் 29 | ஜூன் 29 காலை 04.23 மணி | ஜூன் 30 காலை 6 மணி |
| ஜூலை 29 | ஜூலை 28 காலை 07.27 மணி | ஜூலை 29 காலை 08.54 மணி |
| ஆகஸ்ட் 27 | ஆகஸ்ட் 27 காலை 09.46 மணி | ஆகஸ்ட் 28 காலை 10.22 மணி |
| செப்டம்பர் 26 | செப்டம்பர் 25 காலை 11.06 மணி | செப்டம்பர் 26 காலை 10.44 மணி |
| அக்டோபர் 25 | அக்டோபர் 25 காலை 11.25 மணி | அக்டோபர் 26 காலை 10.09 மணி |
| நவம்பர் 24 | நவம்பர் 23 காலை 11 மணி | நவம்பர் 24 காலை 9 மணி |
| டிசம்பர் 23 | டிசம்பர் 23 காலை 09.57 மணி | டிசம்பர் 24 காலை 07.40 மணி |

## 2026-ம் ஆண்டு கிருத்திகை தினங்கள்

| தேதி | கிழமை | சிறப்பு |
|---|---|---|
| ஜனவரி 1, | வியாழன் | மார்கழி மாத கிருத்திகை |
| ஜனவரி 27, | செவ்வாய் | தை மாத கிருத்திகை |
| பிப்ரவரி 23, | திங்கள் | மாசி மாத கிருத்திகை |
| மார்ச் 22, | ஞாயிறு | பங்குனி மாத கிருத்திகை |
| ஏப்ரல் 19, | ஞாயிறு | சித்திரை மாத கிருத்திகை |
| மே 16, | சனி | வைகாசி மாத கிருத்திகை |
| ஜூன் 13, | சனி | ஆனி மாத கிருத்திகை |
| ஜூலை 10, | வெள்ளி | ஆடிக் கிருத்திகை |
| ஆகஸ்ட் 6, | வியாழன் | ஆவணி மாத கிருத்திகை |
| செப்டம்பர் 3, | வியாழன் | புரட்டாசி மாத கிருத்திகை |
| செப்டம்பர் 30, | புதன் | ஐப்பசி மாத கிருத்திகை |
| அக்டோபர் 27, | செவ்வாய் | ஐப்பசி மாத கிருத்திகை |
| நவம்பர் 23, | திங்கள் | கார்த்திகை தீபம் மற்றும் மாதக் கிருத்திகை |
| டிசம்பர் 21, | திங்கள் | மார்கழி மாத கிருத்திகை |

## 2026-ம் ஆண்டு அமாவாசை தினங்கள்

| ஆங்கில தேதி | கிழமை | தமிழ் தேதி |
|---|---|---|
| ஜனவரி 18 | ஞாயிறு | தை 04 |
| பிப்ரவரி 17 | செவ்வாய் | மாசி 05 |
| மார்ச் 18 | புதன் | பங்குனி 04 |
| ஏப்ரல் 17 | வெள்ளி | சித்திரை 04 |
| மே 16 | சனி | வைகாசி 02 |
| ஜூன் 14 | ஞாயிறு | வைகாசி 31 |
| ஜூலை 14 | செவ்வாய் | ஆனி 30 |
| ஆகஸ்ட் 12 | புதன் | ஆடி 27 |
| செப்டம்பர் 10 | வியாழன் | ஆவணி 24 |
| அக்டோபர் 10 | சனி | புரட்டாசி 23 |
| நவம்பர் 08 | ஞாயிறு | ஐப்பசி 22 |
| டிசம்பர் 08 | செவ்வாய் | கார்த்திகை 22 |

## 2026-ம் ஆண்டு பிரதோஷ நாட்கள்




| ஆங்கில தேதி | தமிழ் தேதி | கிழமை |
|---|---|---|
| ஜனவரி – 01 | மார்கழி – 17 | வியாழன் |
| ஜனவரி – 16 | தை – 02 | வெள்ளி |
| ஜனவரி – 30 | தை – 16 | வெள்ளி |
| பிப்ரவரி – 14 | மாசி – 02 | சனி |
| மார்ச் – 01 | மாசி – 17 | ஞாயிறு |
| மார்ச் – 16 | பங்குனி – 02 | திங்கள் |
| மார்ச் – 30 | பங்குனி – 16 | திங்கள் |
| ஏப்ரல் – 15 | சித்திரை – 02 | புதன் |
| ஏப்ரல் – 29 | சித்திரை – 16 | புதன் |
| மே – 14 | சித்திரை – 31 | வியாழன் |
| மே – 28 | வைகாசி – 14 | வியாழன் |
| ஜூன் – 12 | வைகாசி – 29 | வெள்ளி |
| ஜூன் – 27 | ஆனி – 13 | சனி |
| ஜூலை – 12 | ஆனி – 28 | ஞாயிறு |
| ஜூலை – 26 | ஆடி – 10 | ஞாயிறு |
| ஆகஸ்ட் – 10 | ஆடி – 25 | திங்கள் |
| ஆகஸ்ட் – 25 | ஆவணி – 09 | புதன் |
| செப்டம்பர் – 08 | ஆவணி – 22 | செவ்வாய் |
| செப்டம்பர் – 24 | புரட்டாசி – 07 | வியாழன் |
| அக்டோபர் – 08 | புரட்டாசி – 21 | வியாழன் |
| அக்டோபர் – 23 | ஐப்பசி – 06 | வெள்ளி |
| நவம்பர் – 06 | ஐப்பசி – 20 | வெள்ளி |
| நவம்பர் – 22 | கார்த்திகை – 06 | ஞாயிறு |
| டிசம்பர் – 06 | கார்த்திகை – 20 | ஞாயிறு |
| டிசம்பர் – 21 | மார்கழி – 06 | திங்கள் |




உ

# ஐஸ்வர்யா ஜாதகாலயா

## AISHWARYAA JATHAKALLAYA



கல்வியில் சிறந்து விளங்க, நல்ல வேலை தொழில் அமைய (உள்நாடு மற்றும் வெளிநாடு), திருமண பாக்கியம் பெற, குழந்தை பாக்கியம் பெற, நீதிமன்ற வழக்குகள் சாதகமாக முடிய, நிலம், வீடு, வாகன யோகம் பெற, கடன் நிவர்த்தி பெற, தொழில் விருத்தி பெற, உடல் ஆரோக்கியம், ஆயுள் பலம் பெற, சர்வரோக நிவாரணியாக ஜோதிட அடிப்படையிலும், வாஸ்து முறைப்படியும், பரிஹார பூஜைகள் மூலம், சகல சௌபாக்கியம் பெற எந்திர, தந்திர, மந்திர, யக்ன, பிரயோகம் மூலம் சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்படும்.

அடிப்படை ஜாதகம், பலன் | முழுநீள ஜாதகம், பலன் | பிறந்தநாள் வருடப்பலன் | திருமண ஜாதகப் பொருத்தம்
முகூர்த்த தேதி மற்றும் நேரம் | அதிஷ்டப் பெயர் சூட்டுதல் | வாஸ்து | அதிஷ்டம் தரும் கற்கள் | எண் கணிதப் பலன்

TAMIL, ENGLISH, HINDI, TELUGU, KANNADA, MALAYALAM AND MORE LANGUAGES | Also Provides Astrological Services “Anywhere in the World” You Can Contact:

ஐஸ்வர்யா ஜாதகாலயா திருமண தகவல் மையம் (அனைத்து ஜாதி, மதம்)

கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர்
K.S.Ravindhran, Vedic Astrologer

#55, கவரை தெரு, மேற்கு மாம்பலம் (A.M.R கல்யாண மண்டபம் அருகில்), சென்னை-33.
#55, Kavarai Street, (Near: A.M.R Kalyana Mandapam) West Mambalam, Chennai-33.

98841 41870 | 98841 47630

WebSite: www.aishwaryajathakalaya.com | Our Youtube: aishwaryajathakalaya